பொதுச் சுற்றுநிருப இலக்கம்: 01-04/2024

எனது இலக்கம்: 07/F/01-08/01/06-II/2023
சுகாதார அமைச்சு,
"சுவசிரிபாய"
இல 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10.
2024-02-17

சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் அனைத்து நிறுவன / வைத்தியசாலைத் தலைவர்களுக்கு,

**சுகாதார அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழினுட்ப சேவை வகை (MN 03 - 2006 A) III ஆம் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2024**

சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் திணைக்களம் சார் தொழினுட்ப சேவை வகையீட்டின் கீழ்வரும் பதவிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட முறையின் கீழ் ஆட்சேர்ப்பதற்காக கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளைக் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 02 | குளிரூட்டித் தொழினுட்பவியலாளர் | 11 |
| 04 | தொழினுட்ப உத்தியோகத்தர் (சிவில்) | 03 |
| 05 | தொழினுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) | 01 |

**02. தேவையான தகைமைகள்:**

**2.1. கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள்.**

| தொ.இ. | பதவி | கல்வித் தகைமைகள் | தொழில்சார் தகைமைகள் |
|---|---|---|---|
| 01 | குளிரூட்டித் தொழினுட்பவியலாளர் | (அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் தாய்மொழி மற்றும் கணிதம் உள்ளடங்களாக இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>அல்லது<br>(ஆ) தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 03 இனை பெற்றிருத்தல். | (i) மொறட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழினுட்ப டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(ii) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(iii) திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழினுட்ப டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(iv) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (மின்னியல்) |
| 02 | தொழினுட்ப உத்தியோகத்தர் (சிவில்) | அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் தாய்மொழி மற்றும் கணிதம் உள்ளடங்களாக இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>அல்லது<br>(ஆ) தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 03 இனை பெற்றிருத்தல். | (i) மொறட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழினுட்ப டிப்ளோமா (சிவில்)<br>அல்லது<br>(ii) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா (சிவில்)<br>அல்லது<br>(iii) திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழினுட்ப டிப்ளோமா (சிவில்)<br>அல்லது<br>(iv) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்) |

| | | | |
|---|---|---|---|
| | | | அல்லது<br>(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்)<br>அல்லது<br>(vi) தொழிற் துறையுடன் தொடர்புறும் வண்ணம் தேசிய தொழில்சார் திறன்கள் (NVQ) 05 அல்லது 06 ஆம் மட்ட தகைமையினைப் பூரணப்படுத்தியிருத்தல். |
| 03 | தொழினுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) | அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் தாய்மொழி மற்றும் கணிதம் உள்ளடங்களாக இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>அல்லது<br>(ஆ) தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 03 இனை பெற்றிருத்தல். | (i) மொறட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழினுட்ப டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(ii) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(iii) திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழினுட்ப டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(iv) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(vi) தொழிற் துறையுடன் தொடர்புறும் வண்ணம் தேசிய தொழில்சார் திறன்கள் (NVQ) 05 அல்லது 06 ஆம் மட்ட தகைமையினைப் பூரணப்படுத்தியிருத்தல். |

**2.2. அனுபவம்:-**

(அ) நியமனத்தினை உறுதிப்படுத்தியிருத்தல்

(ஆ) உரிய திகதியினை அண்மித்த வண்ணம் அரச சேவையில் நிரந்தரப் பதவியொன்றில் குறைந்த பட்சம் ஐந்து (05) வருட தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூரணப்படுத்தியிருக்க வேண்டியதுடன், அது தொடர்பில் திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.

குறிப்பு:- தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் என்பதன் மூலம் "பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்படும் விதிமுறைகளின் அடிப்படையில் ஒழுக்காற்றுத் தண்டனையொன்றினை பெற்றிராது இருத்தல் வேண்டும்" என்பது கருத்திற் கொள்ளப்படுகின்றது.

**2.3. தேக ஆரோக்கியம்:-** அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றவும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமான உடலியல் மற்றும் உளவியல் ஆரோக்கியம் கொண்டவராதல் வேண்டும்.

**2.4. பிற தகைமைகள்:-**

விண்ணங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதியாகுகையில் விண்ணப்பதாரர்கினால் அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும். சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

**2.5. வயது:** - ஏற்புடையதல்ல

**03. ஆட்சேர்க்கும் முறை: எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்சார் பரீட்சை .**
**(அ) எழுத்துப் பரீட்சை**

| வினாப்பத்திரம் | பாடத் திட்டம் | நேரம் | மொத்த புள்ளிகள் | தேர்ச்சிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. நுண்ணறிவு மற்றும் பொது அறிவு | உலக ரீதியாக மற்றும் இலங்கையில் தற்கால முக்கியத்துவம் மிக்க கலாசார, சமூகவியல். பொருளாதார, அரசியல், தொழினுட்ப, விஞ்ஞான, விளையாட்டு மற்றும் சூழலியல் போன்ற விடயங்களிலான சம்பவங்கள் பற்றிய அறிவினைப் பரீட்சிப்பதற்காகக் | 02 மணித்தியாலம் | 100 | 40% |

| | | | | |
|---|---|---|---|---|
| | வினாப்பத்திரமாகும். | | | |
| 2. தொழினுட்ப அறிவு | ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக அமையும் தொழினுட்ப அறிவுடன் கூடிய வினாப்பத்திரமாகும். அதற்கான பாடத் திட்டம் கீழே காட்டப்படுகின்றது. | 1 ½ மணித்தியாலம் | 100 | 40% |

| பதவி | தொழினுட்ப அறிவுப் பாடத்திட்டம் |
|---|---|
| 01. குளிரூட்டித் தொழினுட்பவியலாளர் | 1. குளிரூட்டி இயந்திர வகைகள்.<br>2. குளிரூட்டி இயந்திர பராமரிப்பு நடவடிக்கைகள்<br>I. தடுப்புப் பராமரிப்பு (Preventive Maintenance)<br>II. திருத்தப் பராமரிப்பு (Corrective Maintenance)<br>3. குளிரூட்டி இயந்திரமொன்றின் தொழிற்பாடு<br>4. குளிர் சுழற்சி.<br>5. குளிரூட்டி இயந்திரங்களின் கொள்ளவு. |

| பதவி | தொழினுட்ப அறிவுப் பாடத்திட்டம் |
|---|---|
| 02. தொழினுட்ப உத்தியோகத்தர் (சிவில்) | 1. Concrete<br>Concrete கலவை<br>Concrete கலவை வகைகள் மற்றும் அதன் படி இடப்படும் இடங்கள்.<br>Concrete Curing பண்ணும் விதம்<br>Concrete Mix பண்ணும் விதம்<br>Concrete Mix பண்ண உபயோகிக்கும் machines (Vibrator, Mixing Drum)<br>Concrete தரத்தினைப் பரிசோதித்தல் (Slump Test / Cube Test)<br>2. கூரைகள்<br>சிவிலிம் வகைகள் (Asbestos கூரை)<br>கூரைகள்<br>ஓட்டுக் கூரை<br>அஸ்பஸ்டஸ் கூரை<br>3. படமொன்றின் அடிப்படையில் "Volume area" கணிப்பிடுதல்<br>4. Contraction களுக்கு உபயோகிக்கப்படும் பலகை வகைகள், பலகைகளினால் இடப்படுபவற்றின் பாதுகாப்பு முறைகள்.<br>5. சுவர், தரைக்காக மேற்கொள்ளப்படும் Finishing<br>Plastering – Plastering இன் கலவை<br>Plastering இடப்படும் இடங்கள்.<br>Tiling – Tile வகைகள்<br>Painting – Paint வகைகள் மற்றும் அவை பாவிக்கப்படும் இடங்கள். |

| பதவி | தொழினுட்ப அறிவுப் பாடத்திட்டம் |
|---|---|
| 05. தொழினுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) | 1. மின் பாதுகாப்பு<br>2. மின் உதிரிப்பாகங்கள்<br>I.<br>a) எஞ்சிய மின் சுற்றுப் பிரிப்பான் (Residual Current Circuit Breaker– RCCB)<br>b) மினியேச்சர் சுற்றுப் பிரிப்பான் (Miniature Circuit Breaker – MCB)<br>c) பூமி கசிவு சுற்றுப் பிரிப்பான் (Earth Leakage Circuit Breaker – ELCB)<br>II.<br>a) Timers<br>b) Relays<br>c) Cont actors<br>d) Overload Protection<br>e) Direct on – line starter<br>f) Star – Delta Convertor<br>III. வீட்டு மின்சுற்றயல் |

**(ஆ) தொழில்சார் பரீட்சை**

| துறை | பாடத் திட்டம் | நேரம் | மொத்த புள்ளிகள் | தேர்ச்சிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| விடயதான அறிவு | ஒவ்வொரு பதவிக்கும் உரிய துறை தொடர்பிலான விடயங்கள் பற்றிய பற்றிய அறிவினைப் பரிசோதித்தல். | 02 நிமிடங்கள் | 100 | 40% |

04. சம்பளக் கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பளப் பரிமாணம்:

ரூபாய் 31,040 – 10X445 – 11X660 – 10X730 – 10X750 - ரூ. 57,550
MN 03 – 2006(ஏ) (பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 03/2016 இன் உப அட்டவணை (i) இன் படி)

05. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்

i. ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.
ii. நியமிக்கப்படும் பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்குத் தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது பணிக்கப்படுகின்ற விதத்தில் தங்களினால் அதற்கான உதவுத் தொகைகளைச் செழுத்துதல் வேண்டும்.
iii. விண்ணப்பங்களை தமது நிரந்தர சேவை நிலையத்தின் திணைக்கள / நிறுவனத் தலைவர் மூலம் உறுதிப்படுத்தி அனுப்புவதற்கு கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். பரீட்சையில் தோற்றுவதற்கு முன்னர் அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சை அனுமதி அட்டையில் தமது ஒப்பத்தினை தாம் சேவை புரியும் நிறுவனத் தலைவரின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
iv. சேவை அனுபவம் தமது நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.
v. இந் நியமனம் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன், ஆட்சேர்க்கப்பட்டு மூன்று (03) வருடங்களினுள் முதலாம் தகுதிகாண் தடைப்பரீட்சையில் சித்தி பெறுதல் வேண்டும்.
vi. பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 18/2020 இன் படி மற்றும் அதன் இணைச் சுற்றுநிருபங்களின் படி பதவியில் நியமனம் பெற்று 05 வருடங்களினுள் உரிய அரச மொழி பற்றிய தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
vii. பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிக் கோவைகளுக்கும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும், அரசினால் வெளியிடப்படும் சுற்றுநிருப விதிமுறைகளுக்கும், சுகாதார அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழினுட்ப சேவை வகை (MN 03 - 2006 A) இற்கான ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும், சுகாதாரச் செயலாளரினால் வெளியிடப்படுகின்ற சுற்றுநிருபங்கள் மற்றும் பொது விதிமுறைகளுக்கும் இந் நியமனம் உட்படுகின்றது.
viii. தங்களால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படுகின்ற மொழிமூலமே, தாங்கள் நியமனத்தினைப் பெறுவதற்குத் தமைமை பெறும் மொழிமூலம் ஆகும்.

06. விண்ணப்பிக்க வேண்டிய முறை

(அ) விண்ணப்பதாரர்கள் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பத்தின் படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டியதுடன், எந்தவொரு உத்தியோகத்தரதும் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புதல் கூடாது.
(ஆ) விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் **“சுகாதார அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழினுட்ப (MN 03 - 2006 A) சேவை வகையின் திணைக்களம் சார் ...................................... (விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட - 2024”** எனக் குறிப்பிட்டு, 2024.03.22 ஆந் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் (நிர்வாகம்) 07, சுகாதார அமைச்சு, “சுவசிரிபாய” இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி: 2024.03.22

(ஈ) பரீட்சைக் கட்டணம் ரூ. 1,000.00 ஆகும். **இலங்கை வங்கியின் தப்பிரபேன் கிளையில் சுகாதார செயலாளரின் பெயரில் உள்ள கணக்கிலக்கம் 7041318 கணக்கிற்கு** வரவு வைக்கப்படும் வண்ணம், இத் தொகையினை ஏதேனுமோர் இலங்கை வங்கிக் கிளைக்குச் செழுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள கூண்டினுள் கழறாத வண்ணம் ஒட்டுதல் வேண்டும். எந்தவொரு காரணத்தினைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட அல்லது வேறொரு பரீட்சைக்காக மாற்றப்பட மாட்டாது என்பதுடன், எதிர்கால பயன்பாட்டின் பொருட்டு பணம் செழுத்திய பற்றுச்சீட்டின் மற்றும் விண்ணப்பத்தின் பிரதியொன்றினை தன்னகத்தே வைத்துக் கொள்ளுதல் உகந்ததாகும். (காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

(உ) விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பங்களை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் இடம்பெறும் எவ்விதமான மாற்றங்கள் பற்றியும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

07. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற அனைத்துப் பாடங்களின் போதும் மண்டப பொறுப்பாளர் திருப்தியடையும் வண்ணம் தமது சுய ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு கீழ் காட்டப்படும் எந்தவோர் ஆவணமும் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சை மண்டபத்தில் நுழையும் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள இயலும் வண்ணம் முகம் மற்றும் காதுகளை மூடாமல் பரீட்சை மண்டபத்தில் உள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உள்வாங்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தில் உள்நுழைந்த நேரத்தில் இருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை மண்டப உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பதாரியை இனங்காணக் கூடிய வண்ணம் முகம் மற்றும் காதுகளை மூடாது இருத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக பரீட்சை தொடர்பில் தேவைப்படக் கூடிய பிற அறிவுறுத்தல்கள் பரீட்சை அனுமதி அட்டை மூலம் தங்களிடத்தே அறியத் தரப்படும். பரீட்சை தொடர்பிலான இந்

நியமங்களுக்கு முரணாக கருமமாற்றும் விண்ணப்பதாரிகளை பரீட்சை மண்டபத்திற்கு உள்வாங்காமை / பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேற்றும் அதிகாரம் மண்டப பொறுப்பாளரைச் சாரும்.

**08. கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்.**

(அ) திணைக்களத் தலைவர் அல்லது அவருக்காக வேண்டி ஒப்பமிடுவதற்கு முறையான விதத்தில் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால் மட்டுமே இந்த விண்ணப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பத்தில் அடங்கியுள்ள விடயங்கள் அனைத்து விதங்களிலும் சரியானவை என உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர் தனிப்பட்ட ரீதியில் திருப்தி அடைதல் வேண்டும்.

(ஆ) தமைமை பெறுதல் தொடர்பிலான அனைத்து தேவைப்பாடுகளையும் பூரணப்படுத்தாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அவர்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் கூடாது.

**09. போலியான தகவல்களை வழங்குதல்.**

விண்ணப்பத்தினை பூரணப்படுத்துகையில் மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் சட்டதிட்டங்களின் படி யாதேனுமோர் பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்டுள்ள ஏதேனுமோர் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபணமாயின் தங்களது பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய் அல்லது தவறான தகவல் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னரான ஏதேனுமோர் சந்தர்ப்பத்தில் நிரூபணமாயின் அதற்குரிய செயல்முறைகளின் கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**10. பரீட்சை நிபந்தனைகள்**

i. பதவியில் ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியாகுகையில் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும். உரிய தகைமைகளைப் பூரணப்படுத்தியிராத விண்ணப்பதாரிகள் பரீட்சையில் போதிய அளவிலான புள்ளிகளைப் பெற்றிருப்பினும் நியமனங்களைப் பெறுவதற்கு தகுதியற்றவர்கள் ஆவர்.

ii. விண்ணப்பதாரி இப் பதவிக்காக விண்ணப்பிக்கும் மற்றும் ஆட்சேர்க்கப்படும் சந்தர்ப்பங்களின் போது நிரல் அமைச்சு அல்லது அமைச்சுக்குரிய வைத்தியசாலையின் / நிறுவனத்தின் அங்கீகரிக்கப்ட்ட ஆளணியின் பதவியொன்றினை வகித்தல் வேண்டும்.

iii. பதவிகள் சிலவற்றுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன், ஒரு கடித உறையில் ஒரு பதவிக்கான விண்ணப்பத்தினை மட்டுமே இட்டு அனுப்புதல் வேண்டும்.

iv. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்ப படிவத்துடன் இணங்காத விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

v. விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன், தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

vi. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமை உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் முன்கூட்டிய முடிவின் அடிப்படையில் முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அறியத் தரப்படும்.

vii. ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சை நுண்ணறிவு மற்றும் பொது அறிவு அத்துடன் தொழினுட்ப அறிவு எனும் இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டமைவதுடன், ஒவ்வொரு பதவிக்காகவும் வெவ்வேறான வகையில் தொழினுட்ப அறிவு கொண்ட வினாப்பத்திரமொன்று தயாரிக்கப்படும்.

viii. மேற்குறித்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைவோர் மாத்திரம் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

ix. மட்டுப்படுத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்சார் பரீட்சை ஆகிய இரண்டிலும் சித்தியடையும் உத்தியோகத்தர்கள் மட்டுமே ஆட்சேர்ப்பு பரீட்சையில் சித்தியடைந்த உத்தியோகத்தர்களாக கருதப்படுவார்கள். எழுத்துப் பரீட்சையில் மற்றும் தொழில்சார் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் கீழ் நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவதுடன், அவ்வாறு தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள வைத்தியசாலைகள், நிறுவனங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட உள்ளார்கள்.

x. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் எனும் மொழிமூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் விரும்பும் ஒரு மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடிவதுடன், விண்ணப்பிக்கும் மொழிமூலத்தினை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்திகள் இப் பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழியினால் மட்டுமே பதில் அளித்தல் வேண்டும்.

கவனத்திற் கொள்ளவும்:-

(அ) விண்ணப்பத்தின் அனைத்து வாசகங்களும் பூரணப்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் குறித்த தகவல்களின் நம்பகுதன்மை தொடர்பில் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்துடன் ஏதேனும் ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அறியத்தரப்படும் சந்தர்ப்பங்களில், குறித்த ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. அவ்வாறின்றி விண்ணப்பத்துடன் எவ்விதத்திலும் தொடர்பற்ற ஆவணங்கள் அல்லது அதன் பிரதியினை இணைத்தல் கூடாது.

(இ) பரீட்சையினை விண்ணப்பிக்கும் திகதியில் காணப்பட்ட விண்ணப்பதாரரின் நிரந்தரப் பதவி மற்றும் சேவை நிலையம், பரீட்சை தொடர்பிலான இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் ஏற்புடையதாவதுடன், விண்ணப்பத்தினை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் இடம்பெறும் எந்தவொரு மாற்றமும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பம் அல்லது அது தொடர்பிலான கடிதமொன்று தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமடைந்ததாக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரையில் விண்ணப்பங்களைத் தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரிகளே தாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(உ) ஒரு கடித உறையின் மூலம் விண்ணப்பங்கள் சிலவற்றினை அனுப்பியிருக்கையில், கடித உறையில் காட்டப்பட்டுள்ள பதவிக்காக மட்டும் பரீட்சையில் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், ஏனைய விண்ணப்பங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியாத சந்தர்ப்பங்களில் முதலில் சரியாகப் பூரணப்படுத்தப்படட்டு இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு மேற்குறித்த வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் எண்ணிக்கை, பதவிகளுக்கு நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படுத்தப்படும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களின் ஏதேனுமோர் எண்ணிக்கையினை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

(எ) பதவிக்கு ஆட்சேர்த்தல் தொடர்பில் இந்த வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உள்வாங்கப்பட்டுள்ள அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பில் சிக்கலானதோர் நிலை ஏற்படின் அது பற்றிய சுகாதார அமைச்சுச் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும். அவ்வாறே சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலின் மொழி வாசகங்களிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது இணங்காமை அல்லது முரண்பாடுகள் உள்ளதாகக் காணக்கிடைப்பின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வைத்தியர் பீ.ஜீ. மஹீபால,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

Dr. P. G. Mahipala
Secretary
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10. Sri Lanka.

...17... ஆம் திகதி ...02... மாதம் 2014
சுகாதார அமைச்சு,
"சுவசிரிபாய"
இல 385,
வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.

## மாதிரி விண்ணப்படிவம்

சுகாதார அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழினுட்ப சேவை வகையின் (MN 03 - 2006 A) இன் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2024

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:- ☐
(சிங்களம் S, தமிழ் - T, ஆங்கிலம் - E)
(குறித்த ஆங்கில எழுத்தினை கூண்டினுள் எழுதவும்)

வதிவிட மாவட்டம் ☐

விண்ணப்பிக்கும் பதவி ☐

1.
i. முதலெழுத்துக்களுடனான பெயர் (சிங்களத்தில் /தமிழில்):- ........................................
ii. முதலெழுத்துக்களுடனான பெயர் (ஆங்கிலப் பேரெழுத்துக்களில்):- ........................................
iii. முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்):- ........................................
iv. முழுப் பெயர் (ஆங்கிலப் பேரெழுத்துக்களில்):- ........................................

2. நிரந்தர வதிவிட முகவரி

i. சிங்களத்தில்/தமிழில்-: ........................................
ii. ஆங்கிலப் பேரெழுத்துக்களில்:-........................................

3. நிரந்தர சேவை நிலையத்தின் கடமை முகவரி

i. சிங்களத்தில்/தமிழில்-: ........................................
ii. ஆங்கிலப் பேரெழுத்துக்களில்:-........................................

(உத்தியோகத்தரின் முகவரியில் மாற்றம் ஏற்படின் அதனை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

4. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-...................
5. தொலைபேசி இலக்கம்:- சொந்த (கையடக்க)................. அலுவலக: ..................................
6. மின்னஞ்சல் முகவரி :- ........................................

7. இலங்கைப் பிரசையா என்பது பற்றி:- ஆம் ☐ இல்லை ☐

8. பால்:- ஆண் ☐ பெண் ☐

9. பிறந்த திகதி:-

| வருடம் | | | | | மாதம் | | | திகதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

10. விவாகமானவரா / விவாகமாகாதவரா :- ........................................

11. கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்:-

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சை:-

வருடம்:- ............ பரீட்சை இலக்கம்:-.......... அமர்வு:-........... வருடம்:- ......... பரீட்சை இலக்கம்:-.......... அமர்வு:-........

| தொ/இ | பாடம் | சித்தி |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |
| 10 | | |

| தொ/இ | பாடம் | சித்தி |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |
| 10 | | |

(ஆ) தொழில்சார் மற்றும் தொழினுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள்:-

| தொ/இ | தொழில்சார் தகைமைச் சான்றிதழ்கள் | வழங்கிய நிறுவனம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

(நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட தொழில்சார் மற்றும் தொழினுட்பத் தகைமைகளுக்கான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்)

(இ) ஏனைய விசேட தகைமைகள் மற்றும் அனுபவங்கள்:- ................................................

.........................................................................................................

.........................................................................................................

.........................................................................................................

.........................................................................................................

12. பொதுச் சேவைகள் ஆணைக்குழுச் சுற்றுநிருபம் 01/2020 இல் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு அமைவாக தண்டனையினைப் பெற்றுள்ளீர்களா என்பதுடன், ஏதேனுமோர் கிரிமினல் குற்றத்திற்காக எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீர்களா?
(ஆம் எனில் விபரங்களை வழங்கவும்)

.........................................................................................................

.........................................................................................................

13. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள்:-
   i. பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கிக் கிளை :-....................................
   ii. பரீட்சைக் கட்டணம் செலுத்திய திகதி :- ...................................

| |
|---|
| இலங்கை வங்கிக் கிளையொன்றில் ரூ. 1,000.00 எனும் தொகையினைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை கழறாத வண்ணம் இங்கு ஒட்டவும் (விண்ணப்பத்தின் மற்றும் பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தன்னகத்தே வைத்துக் கொள்ளுதல் பின்னர் பயனளிக்கலாம்). |

14.

இந்த விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையான மற்றும் சரியான தகவல்கள் கௌரவத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் அடங்கும் ஏதேனுமோர் விபரம் பொய்யானது அல்லது போலியானது என கண்டுபிடிக்கப்படின், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது தெரிவு செய்யப்பட முன்னராயின் அவ்விண்ணப்பம் இரத்தாகும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் எவ்வித நட்டஈடுமின்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி: .................. ..............................
விண்ணப்பதாரியின் ஒப்பம்

15. திணைக்கள / நிறுவனத் தலைவரினால் பூரணப்படுத்தப்பட வேண்டிய விபரங்கள்.

i. உத்தியோகத்தரின் பெயர்: ..........................................................................

ii. உத்தியோகத்தரின் தேசிய அடையாள அட்டை இலக்கம்: ........................................

iii. பரீட்சைக்கு விண்ணப்பிக்கையில் வகித்த பதவி: ..................................................

iv. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான 05 வருட சேவைக் காலம் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா? ................................

v. பதவியில் நிரந்தரப்படுத்திய வண்ணம், நிரந்தரப்படுத்தும் கடிதமொன்று வழங்கப்பட்டுள்ளதா? (அவ்வாறாயின் அக் கடிதத்தின் உறுதிப்படுத்திய பிரதியொன்றினை இணைக்கவும்.)

.........................................................................................................

vi. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முந்திய 05 வருட காலப்பகுதியினுள் அனைத்து சம்பளவேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளாரா? .......................................

vii. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முந்திய 05 வருட காலப்பகுதியினுள் ஒழுக்காற்று ரீதியிலான தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரா? ……………………………….

viii. தற்சமயம் ஒழுக்காற்று விசாரணைகள் இடம் பெறுகின்றனவா? …………………………............

இவ் விண்ணப்பதாரியான திரு/ திருமதி/ செல்வி. …………………………………………. இந் நிறுவனத்தில் ………………………… ஆந் திகதி முதல் சேவையாற்றுகின்றார். அவர் நிரந்தர, ஓய்வூதியம் கொண்ட பதவியொன்றினை வகிக்கின்றார். கடந்த ……… வருட காலப்பகுதியினுள் அவர் அனைத்து சம்பளவேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார் எனவும், அவர் ஏதேனுமோர் ஒழுக்காற்று ரீதியிலான தண்டனைக்கு (எச்சரித்தல் தவிர்ந்த) உட்படுத்தப்படவில்லை எனவும், மேலே 15 ஆம் விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் இவ் அலுவலகத்தில் உள்ள அறிக்கைகளின் அடிப்படையில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன எனவும், அவை சரியானவை எனவும், அவர் இந்தப் பதவிக்காகத் தெரிவு செய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார்/ விடுவிக்கப்பட மாட்டார் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………………..

திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஒப்பம்

ஒப்பம் :- ………………………………………………………………………………

பெயர் :- ………………………………………………………………………………

பதவிப் பெயர் :- ……………………………………………………………………..................

திகதி :- ……………………………………………………………………...................

திணைக்களம்/ நிறுவனம் :-……………………………………………………………………...............

(இறப்பர் இலச்சினை மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்).

(கவனத்திற் கொள்ளவும்:- வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உரிய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூரணப்படுத்தியிராத உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களை அனுப்பாமல் இருப்பதற்கு நிறுவனத் தலைவர்கள் கருத்தாயிருத்தல் வேண்டும்).